This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# 1. வானத்தில் ஒரு மௌனத் தாரகை

www.writersujatha.com

காலையிலேயே போட்டோ எடுக்க வந்தார்கள். துருவா நளினியையும் வினோத்தையும் தொட்டுக்கொண்டு சிரித்துக்கொண்டிருக்க, ஸ்டில் காமிராக்கள் ‘க்ளிக் க்ளிக் க்ளிக்’ என்று பேசின. ஆர்க் விளக்கை ஒருத்தன் உயர்த்திப் பிடிக்க திரைப்படக் காமிராக்கள் விர்ர்ரின.

“ஆல்ரைட், ஆல்ரைட், நீங்க போகலாம். அவருக்கு ஏகப்பட்ட வேலையிருக்கு” என்று நாராயண் ராவ் அதட்ட, மேஜைமேல் டெலிபோன் ஒலித்தது.

“ஹலோ!”

ராவ் சட்டென்று உஷாரானார். “ஷ்ஷ்” என்று மற்றவர்களை அதட்டினார். “எஸ் ஸார்! இருக்கார் ஸார்! இதோ ஸார்! கூப்பிடறேன் ஸார்!” என்று டெலிபோனின் வாயைப் பொத்தி ‘தலைவர்’ என்றார். துருவா பாய்ந்து டெலிபோனை வாங்கிக்கொண்டான்.

“குட்மார்னிங் ஸார்! துருவா ஹியர்!”

தலைநகரிலிருந்து தலைவரின் குரல் துல்லியமாக ஒலித்தது. “குட்மார்னிங் துருவா! எப்படி இருக்கிறாய்?”

“மிகவும் சந்தோஷமாக! மிகவும் ஆர்வமாக!”

“எல்லாம் தயாரா?”

“தயார் ஸார்!”

“துருவா! இந்தத் தேசமே உன்னைப் பற்றிப் பெருமைப்படுகிறது.”

“அதெல்லாம் பெரிய வார்த்தைகள். நான் என் கடமையைச் செய்கிறேன் ஸார்! கீழே நீங்கள் இருக்கும்வரை எனக்கு என்ன ஸார் கவலை?”

www.writersujatha.com

“உன் துணிச்சலுக்கும் இளமைக்கும் கட்டுப்பாடான மனத்திற்கும் நவீன இந்தியா அஞ்சலி செய்கிறது. இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தலைசிறந்த இந்தியர்களின் வரிசையில் நீ பிரதான இடம்பெறுவாய். நீ செய்வது ஒரு மகத்தான காரியம்!”

“உங்களைப் போன்ற சிறந்த தலைவரிடமிருந்து, இந்த நாட்டின் முதல் குடிமகனிடமிருந்து இந்தப் பாராட்டு வார்த்தைகளைப் பெற நான் மிகவும் பெருமைப்படுகிறேன்!”

“துருவா! உன் பிரயாணத்தின் ஒவ்வொரு கணத்தையும் நான் பார்த்துக்கொண்டுதான் இருப்பேன். உன் மனைவிக்கு என் நமஸ்காரங்கள். உன் மகனுக்கு என் அன்பு முத்தங்கள். ஆண்டவன் உன்னோடு இருக்கட்டும்!”